## பிரதமர் மோடி சந்திக்க மறுத்ததால்

# ஒன்றிய அரசுக்கு எதிராக ஓ.பி.எஸ். கண்டனம் தெரிவித்துள்ளார்!

## திருச்சியில் – அமைச்சர் கே.என்.நேரு பேட்டி!

**திருச்சி,ஆக.1-**

**“பிரதமர் நரேந்திர மோடி தமிழகத்திற்கு வந்த பொழுது ஓ பன்னீர்செல்வத்தை சந்திக்க நேரம் ஒதுக்காததால் அவர் ஒன்றிய அரசுக்கு கண்டனம் தெரிவித்திருப்பார்” என்று திருச்சியில் அமைச்சர் கே. என். நேரு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.**

திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் டெல்டா பகுதி திமுக மாவட்ட செயலாளர்கள் மற்றும் பொறுப்பு அமைச்சர்களுடன் ‘ஓரணியில் தமிழ்நாடு’ தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

தி.மு.க. முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே. என்.நேரு தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில், அமைச்சர்கள் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சி.வீ.மெய்யநாதன், டிஆர்பி. ராஜா, எஸ்.எஸ்.சிவசங்கர், கோவி.செழியன், சி.வி. கணேசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் பேசியதாவது:-



டெல்டா மாவட்டங்களில் உறுப்பினர் சேர்க்கை இலக்கு *41,05,227*. இதில், *28,57,248* பேரை இணைத்துள்ளோம்.

கழகத்தின் அமைப்பு வாரியாக பகுதியில் *33* சதவீதம், நகரத்தில் *24* சதவீதம், பேரூர் அளவில் *22* சதவீதம், ஒன்றிய அளவில் *28* சதவீதம் உறுப்பினர் சேர்க்கை நிறைவு பெற்றுள்ளது.

மாவட்ட வாரியாக அதிகளவு உறுப்பினர் சேர்க்கையில் திருச்சி மேற்கு தொகுதி முதலிடத்தில் உள்ளது. 1,22, 979 உறுப்பினர் சேர்ந்துள்ளனர். தொடர்ந்து, புதுக்கோட்டை தெற்கு, நாகப்பட்டினம், கடலூர் மேற்கு, திருச்சி வடக்கு ஆகிய பகுதிகள் உள்ளன. குறைந்த அளவு உறுப்பினர் சேர்க்கை பதிவு செய்த நன்னிலம், திருத்துறைப்பூண்டி, சீர்காழி, பூம்புகார், நெய்வேலி உள்ளிட்ட தொகுதிகளில் உறுப்பினர் சேர்க்கையை அதிகப்படுத்த வேண்டும்.

எனவே, தொகுதி வாரியாக உறுப்பினர் சேர்க்கையை தொடர்ந்து அதிகரிக்க கழகத்தில் இருந்து அறிவுறுத்தியுள்ளனர். எனவே, டெல்டா மாவட்டங்களில் உறுப்பினர் சேர்க்கையை அதிகரிக்க ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்றார்.

பள்ளி கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பேசுகையில், எத்தனை மண்டலங்களாக பிரிக்கப்பட்டாலும் அதில் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கையில் முதல் மண்டலமாக டெல்டா மண்டலம் வந்தது என்பதை காட்டும் வகையில் நாம் செயல்பட வேண்டும்.

உழைப்பதற்கு யாரும் சுணக்கம் காட்ட கூடாது. இரண்டாவது மண்டலமாக இருக்கும் டெல்டா மாவட்டத்தை முதல் இடத்திற்கு கொண்டு வர வேண்டும் என்றார்.

கூட்டத்திற்கு பின்னர் அமைச்சர் கே.என்.நேரு செய்தியாளர்களிடம் கூறுகையில், ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க்கையில் டெல்டா மாவட்டம் சிறப்பாக செயல்பட்டுள்ளதாக தமிழக முதல்வர் தெரிவித்துள்ளார். இந்த டெல்டா பகுதிகளில் குறிப்பிட்ட சில இடங்களில் உறுப்பினர் சேர்க்கை குறைவாக உள்ளது தொடர்பாக இந்த கூட்டத்தில் பேசப்பட்டுள்ளது. அனைவரும் ஒருங்கிணைந்து மாவட்ட உறுப்பினர் சேர்க்கை அதிகரிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஓபிஎஸ் ஒன்றிய அரசுக்கு கண்டனம் தெரிவித்துள்ளதற்கு, “மோடி தமிழகத்திற்கு வரும்போது அவரை சந்திக்க அனுமதிக்காததற்காக, அவர் கண்டனம் தெரிவித்திருக்கலாம்” என்றார்.

இந்த கூட்டத்தில் தி.மு.க. டெல்டா மண்டல மாவட்டச் செயலாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



திருச்சியில் மாதவரம் முதல் திருச்சி பஞ்சபூர். கலைஞர் மு.கருணாநிதி ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் வரை இரண்டு புதிய குளிர்சா தனப் பேருந்துகளை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன், தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர். நிகழ்ச்சியில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக வாரிய தலைவர் கௌதமன், விழுப்புரம் மேலாண் இயக்குனர் குணசேகரன், மண்டல பொது மேலாளர் சதீஷ்குமார் மற்றும் போக்குவரத்து கழக பணியாளர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

## திண்டுக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ம.கணேசன் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு திண்டுக்கல் கிழக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–நகரம்–பகுதி–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பகுதி / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 06.08.2025 | பழனி நகரம் | மதீனா நகர், பழனி. | குமரி பிரபாகரன் சி.ஷாலினி |
| 2 | | | இந்திரா நகர், பழனி. | குமரி பிரபாகரன் சி.ஷாலினி |
| 3 | 7.8.2025 | திண்டுக்கல் பகுதி–1 | 1–வது வார்டு, கருணாநிதி நகர். | குமரி பிரபாகரன் ஜோ.கேத்ரின் மெர்லினா |
| 4 | | திண்டுக்கல் பகுதி–2 | கோபால் நகர், திண்டுக்கல். | குமரி பிரபாகரன் ஜோ.கேத்ரின் மெர்லினா |
| 5 | 8.8.2025 | ஆத்தூர் கிழக்கு ஒன்றியம் | செட்டியப்பட்டி | தூத்துக்குடி சரத்பாலா அ.சுஹாசினி |
| 6 | | சின்னாளப்பட்டி பேரூர் | பூஞ்சோலை | தூத்துக்குடி சரத்பாலா அ.சுஹாசினி |
| 7 | | ஆத்தூர் தெற்கு ஒன்றியம் | சீவல்சரகு | கந்திலி கரிகாலன் வா.ராஜேஸ்வரி |
| 8 | | ரெட்டியார்சத்திரம் தெற்கு ஒன்றியம் | அனுமந்தராயன் கோட்டை | கந்திலி கரிகாலன் வா.ராஜேஸ்வரி |
| 9 | | ரெட்டியார்சத்திரம் மேற்கு ஒன்றியம் | ராமலிங்கப்பட்டி | சாவல்பூண்டி சுந்தரேசன் ம.சையது முஷாரப் |
| 10 | | கன்னிவாடி | கலையரங்கம் அருகில் | சாவல்பூண்டி சுந்தரேசன் ம.சையது முஷாரப் |
| 11 | | திண்டுக்கல் தெற்கு ஒன்றியம் | ரெட்டியப்பட்டி, தோட்டனூத்து. | கரூர் முரளி அ.செல்வக்குமார் |
| 12 | | திண்டுக்கல் கிழக்கு ஒன்றியம் | சீலப்பாடி பிரிவு | கரூர் முரளி அ.செல்வக்குமார் |
| 13 | 9.8.2025 | பழனி கிழக்கு ஒன்றியம் | மருத்துவநகர் | தூத்துக்குடி சரத்பாலா சி.மில்லர் மண்டேலா |
| 14 | | ஆயக்குடி பேரூர் | அரிசி ஆலை திடல் | தூத்துக்குடி சரத்பாலா சி.மில்லர் மண்டேலா |
| 15 | | பழனி வடக்கு ஒன்றியம் | சின்னக்கலையம்புத்தூர் | கந்திலி கரிகாலன் சி.ஷாலினி |
| 16 | | நெய்க்காரப்பட்டி பேரூர் | 7–வது வார்டு, முகமதியார் தெரு. | கந்திலி கரிகாலன் சி.ஷாலினி |
| 17 | | பழனி மேற்கு ஒன்றியம் | அ.கலையம்புத்தூர் | கரூர் முரளி வா.ராஜேஸ்வரி |
| 18 | | பாலசமுத்திரம் பேரூர் | பார்க் திடல் | கரூர் முரளி வா.ராஜேஸ்வரி |
| 19 | | நிலக்கோட்டை மேற்கு ஒன்றியம் | மைக்கேல்பாளையம் | வெள்ளைச்சாமி ஜோ.கேத்ரின் மெர்லினா |
| 20 | | அம்மைநாயக்கனூர் பேரூர் | கலைஞர் திடல் | வெள்ளைச்சாமி ஜோ.கேத்ரின் மெர்லினா |
| 21 | | நிலக்கோட்டை தெற்கு ஒன்றியம் | எத்திலோடு | பழனி குமணன் அ.சுஹாசினி |
| 22 | | நிலக்கோட்டை பேரூர் | புதுத்தெரு | பழனி குமணன் அ.சுஹாசினி |
| 23 | | வத்தலக்குண்டு வடக்கு ஒன்றியம் | தும்பலப்பட்டி | சாவல்பூண்டி சுந்தரேசன் அ.செல்வக்குமார் |
| 24 | | வத்தலக்குண்டு பேரூர் | காளியம்மன் கோயில் அருகில் | சாவல்பூண்டி சுந்தரேசன் அ.செல்வக்குமார் |
| 25 | | சேவுகம்பட்டி பேரூர் | உசிலம்பட்டி சாலைப் பிரிவு | சாவல்பூண்டி சுந்தரேசன் அ.செல்வக்குமார் |

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பகுதி / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 26 | 9.8.2025 | வத்தலக்குண்டு கிழக்கு ஒன்றியம் | ஊராட்சி மன்றம் அருகில், விராலிப்பட்டி. | போடி காமராஜ் ம.சையது முஷாரப் |
| 27 | | பட்டிவீரன்பட்டி பேரூர் | அண்ணா மன்றம் அருகில் | போடி காமராஜ் ம.சையது முஷாரப் |
| 28 | | திண்டுக்கல் பகுதி–5 | மேட்டுப்பட்டி | சேலம் சுஜாதா ரா.ப்ரீத்தி |
| 29 | | திண்டுக்கல் பகுதி–6 | தங்கம் லாட்ஜ் அருகில், திண்டுக்கல். | சேலம் சுஜாதா ரா.ப்ரீத்தி |
| 30 | 10.8.2025 | திண்டுக்கல் பகுதி–3 | 21–வது வார்டு, சௌராஸ்டிராபுரம். | நாமக்கல் கண்ணன் அ.தீன்ஷா நூஃப் |
| 31 | | திண்டுக்கல் பகுதி–4 | சந்தை சாலை, நாகல் நகர். | நாமக்கல் கண்ணன் அ.தீன்ஷா நூஃப் |
| 32 | | கொடைக்கானல் மேல்மலை ஒன்றியம் | கவுஞ்சி மன்னவனூர் ஊராட்சி | தூத்துக்குடி சரத்பாலா ம.சையது முஷாரப் |
| 33 | | கொடைக்கானல் மத்திய ஒன்றியம் | வில்பட்டி | தூத்துக்குடி சரத்பாலா ம.சையது முஷாரப் |
| 34 | | கொடைக்கானல் கீழ்மலை வடக்கு ஒன்றியம் | வடகவுஞ்சி | கந்திலி கரிகாலன் சி.மில்லர் மண்டேலா |
| 35 | | கொடைக்கானல் கீழ்மலை தெற்கு ஒன்றியம் | தாண்டிக்குடி | கந்திலி கரிகாலன் சி.மில்லர் மண்டேலா |
| 36 | | பண்ணைக்காடு பேரூர் | ஆலடிப்பட்டி கூட்டுறவு பண்டக சாலை அருகில் | கந்திலி கரிகாலன் சி.மில்லர் மண்டேலா |
| 37 | | ஆத்தூர் மேற்கு ஒன்றியம் | சித்தரேவு | வெள்ளைச்சாமி ரா.கனிமொழி |
| 38 | | அய்யம்பாளையம் பேரூர் | சின்ன அய்யம்பாளையம் நிலக்கோட்டை | வெள்ளைச்சாமி ரா.கனிமொழி |
| 39 | | சித்தையன்கோட்டை பேரூர் | கடை வீதி | வெள்ளைச்சாமி ரா.கனிமொழி |
| 40 | | ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றியம் | ரெட்டியார்சத்திரம் | பழனி குமணன் அ.தீன்ஷா நூஃப் |
| 41 | | திண்டுக்கல் வடக்கு ஒன்றியம் | மாலைப்பட்டி சாலை, பாலகிருஷ்ணாபுரம். | பழனி குமணன் அ.தீன்ஷா நூஃப் |
| 42 | | நிலக்கோட்டை வடக்கு ஒன்றியம் | சிலுக்குவார்பட்டி | நாமக்கல் ராஜகோபால் அ.சுஹாசினி |
| 43 | | வத்தலக்குண்டு தெற்கு ஒன்றியம் | குன்னுவராயன் கோட்டை | நாமக்கல் ராஜகோபால் அ.சுஹாசினி |
| 44 | | கொடைக்கானல் நகரம் | மூஞ்சிக்கல் | சேலம் சுஜாதா அ.செல்வக்குமார் |
| 45 | | | நாயுடுபுரம் | சேலம் சுஜாதா அ.செல்வக்குமார் |
| 46 | | தாடிக்கொம்பு பேரூர் | உண்டார்பட்டி | போடி காமராஜ் வா.ராஜேஸ்வரி |
| 47 | | அகரம் பேரூர் | விட்டல்நாயக்கன்பட்டி | போடி காமராஜ் வா.ராஜேஸ்வரி |

**திண்டுக்கல்**

நாள் : 30.07.2025

கலைஞர் 100 1924 - 2023

